# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/5 - 2018 ජනවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2018.01.02

*2052/5 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல்*

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 12 ஆம் 14 ஆம் மற்றும் 22 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2017.07.28 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2017.07.28 ஆந் திகதிய 2029/51 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2017.11.07 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றது.*

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2017, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதி**

1. வரித் தீர்வைகளற்ற கடைகளில் வெளிநாட்டு நாணய அலகுகளில் விற்பனை செய்வதற்காக அல்லது மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானங்கள் நீங்கலாக, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு தொகை லீற்றர் வெளிநாட்டு மதுபான வகைக்கும் அவை இறக்குமதி செய்யப்படுகின்ற போது கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதுவரி செலுத்தப்படுதல் வேண்டும்.

| மதுபான வகை | மதுவரி (தொகை) லீற்றர் ஒன்றுக்கு (ரூபா) | இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| (i) வெளிநாட்டு மாவூறல் மதுபானம் (பியர்) | 50.00 | 22.03 |
| (ii) வெளிநாட்டு வைன் | 100.00 | 22.04, 22.05, 22.06 |
| (iii) ஏனைய வெளிநாட்டு மதுபானங்கள் (மேலே (i), (ii) தவிர்ந்தவை) | 200.00 | 22.08 |

2. இங்கு அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை வெளிநாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்யும் நோக்கில் மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்ததன் பின்னர், இங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாம்.

3. விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுராவிடின், அது தொடர்பான காரணம் விளக்கப்பட்டு, விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்ற ஐந்து நாட்களில் மதுவரி ஆணையாளர் நாயகம் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

4. இங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி எந்தவொரு வெளிநாட்டு மதுபானமும் இறக்குமதி செய்யப்படலாகாது.

5. வெளிநாட்டு மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி நாட்டினுல் இறக்குமதி செய்யப்படின், மேற்குறித்த வரிக்கு மேலதிகமாக கிரய, காப்புறுதி, கேள்வு பெறுமதியில் (CIF) 3% இனை மேலதிக அறவீடாக விதிக்கவோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட தொகை மதுபானத்தினை அரசுடமையாக்குவதற்கோ மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

6. இங்கு அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அதிகாரம் பெற்ற சுங்க அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்ட சுங்க சான்றிதழ் ஒன்றினை மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு வெளிநாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்யும் போது அனுப்பப்படுதல் வேண்டும்.

7. இங்கு அட்டவணை III இல் தரப்பட்டுள்ள சுங்க சான்றிதழினை மதுவரி ஆணையாளருக்கு அனுப்பியதனைத் தொடர்ந்து, இங்கு அட்டவணை IV மற்றும் V இல் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களை விடுவிக்கும் வகையில் அதனைக் கொண்டு செல்வதற்கான மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பனவற்றிற்கான மதுவரி செலுத்தியமைக்கான சான்றிதழி வழங்கப்படுதல் வேண்டும். கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பனவற்றிற்காக மதுவரி செலுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழின்றி இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்தினை இலங்கை சுங்கம் விடுவித்தலாகாது.

8. வெளிநாட்டு மதுபானங்களை நாட்டினுள் இறக்குமதி செய்யும் போது அவற்றினை பகுப்பாய்விற்கு உட்படுத்தி (தராதரம் மற்றும் செறிவு) அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். பகுப்பாய்வு அறிக்கையானது இலங்கை இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படுதல் வேண்டும். மதுவரி ஆணையாளர் நாயகம் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினைப் பெறுவதற்காக மாதிரி மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கலாம். அவ்வாறே, மதுபான இறக்குமதியின் போது மதுபானங்களின் தராதரங்கள் மற்றும் செறிவு தொடர்பான முழுப் பொறுப்பினையும் மதுபான இறக்குமதியாளர்களே பொறுப்பேற்றல் வேண்டும். பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினைப் பெறுவது தொடர்பான நிர்ணயங்களை மதுவரி ஆணையாளர் விதிக்கலாம்.

9. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதுபான இறக்குமதிக்கான உரிமப்பத்திரத்தினை அதற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் தேவைக்கேற்ப பரிசோதிப்பதற்காக வேண்டப்படும் போது உடனடியாக அதனை சமர்ப்பித்தல் வேண்டும். வெளிநாட்டு மதுபான இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம், அவற்றினை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு என்பனவற்றினை மதுவரி உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் (F. L. 3) கோப்பிலிட்டு வைத்திருத்தல் வேண்டும்.

10. மேலே பந்தி இல. 01 இன் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை மீள் ஏற்றுமதி செய்கையில் அதற்காக அறவிடப்பட்ட மதுபான வரி மீளளிப்புச் செய்யப்படலாம். மீளளிப்பு நடைமுறையானது மதுபானங்களை மீள் ஏற்றுமதி செய்த நாள் முதல் 30 நாட்களுக்குள் இத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) மதுபான இறக்குமதிக்கான மதுவரி இறக்குமதி அனுமதிப்பத்திரம் ;
(ii) மதுவரி செலுத்தியுள்ளமைக்கான பற்றுச் சீட்டு ;
(iii) இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தியுள்ளமைக்கான சான்று ;
(iv) வார்நாமம்/விமான வழிச்சீட்டு ;
(v) ஏற்றுமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்கான விலைப்பட்டியல் ;
(vi) சுங்க ஏற்றுமதிப்பத்திரம்.

11. 2016.08.26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 989 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் மற்றும் 2016.10.03 ஆந் திகதிய 1987/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 990 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் 2017.03.10 ஆந் திகதிய 2009/45 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 995 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

## அட்டவணை I

### *மதுபான இறக்குமதிக்கான விண்ணப்பப்படிவம்*

விண்ணப்ப இல. :....................

1. விண்ணப்பதாரரின் பெயர் :-----.
2. தேசிய அடையாள அட்டை அல்லது வியாபார பதிவு இல. :-----.
3. தொலைபேசி இல. :-----.
4. மின்னஞ்சல் :-----.
5. விண்ணப்பதாரரின் வியாபார முகவரி :-
6. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :-----.
7. மதுவரி உரிமம் செயற்படுத்தப்படும் பிரதேசத்தின் பெயர் மற்றும் முகவரி (F. L. 3) :-----.
8. (i) மதுபானத்தின் உற்பத்தி நாடு :----.
   (ii) மதுபானத்தின் இறக்குமதி நாடு :----.
   (iii) முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இல :... மற்றும் திகதி :----.
   (iv) செல்லுபடியாகும் காலம் :----.
   (முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இணைக்கப்படுதல் வேண்டும்).
9. இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்தின் லீற்றர்களின் எண்ணிக்கை :-----.
   மாவூறல் மதுபானம் அல்லது பியர் -
   வைன் -
   ஏனைய வெளிநாட்டு மதுபானம் -
10. மதுபானம் இறக்குமதிக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட திகதி :-
11. ஏனைய விடயங்கள் :

--------------------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

### அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

மதுபானத்தினை இறக்குமதி செய்வதற்கான அனுமதியானது மேலேயுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ...................... (இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம்/விசேட நிபந்தனைகளுடன்) அளிக்கப்பட்டது/அளிக்கப்படவில்லை.

-------------------------,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

திகதி :-----.

## அட்டவணை II

### இலங்கை மதுவரி திணைக்களம்
### மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரம்

1. உரிமதாரரின் பெயர் :......................
2. தேசிய அடையாள அட்டை அல்லது வியாபார பதிவு இல. :.....................
3. வியாபார முகவரி :......................
4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :.....................
5. விண்ணப்ப இலக்கம் :...............................
6. மதுபான இறக்குமதி உரிம இல. :............................

   (i) முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இல. மற்றும் திகதி :...................
   (ii) செல்லுபடியாகும் காலம் :.................
   (iii) மதுபானத்தின் இறக்குமதி நாடு :..................

7. மதுபானத்தின் வகையும் லீற்றர்களின் எண்ணிக்கையும் :...................

   மாவூறல் மதுபானம் அல்லது பியர் -

   வைன் -

   ஏனைய வெளிநாட்டு மதுபானம் -

8. இறக்குமதி உரிமம் செல்லுபடியாகும் காலம் :.............. முதல் :.............. வரை :..............
9. ஏனைய விடயங்கள் .

வெளிநாட்டு மதுபானங்களை நாட்டினுள் இறக்குமதி செய்வதற்காக மாத்திரம் இவ்வனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் என்பதுடன் மதுவரிகளை செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை இவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் சுங்கத்திலிருந்து விடுவித்தலாகாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மதுபான அளவினை மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அமைய இறக்குமதி செய்வதற்கு நான் அங்கீகாரம் வழங்குகிறேன்.

-----,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

திகதி :-----.

## அட்டவணை III

மதுவரி ஆணையாளர் நாயகம்,
மதுவரி தலைமை அலுவலகம்,
கொழும்பு.

### சுங்கச் சான்றிதழ்

மதுவரித் திணைக்களத்தின் . .........ஆம் இலக்க மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் .......................... என்ற முகவரியில் வசிக்கும் ..............(உரிமப்பத்திரத்தாரரின் பெயர்) என்பவரால் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மதுபானமானது இலங்கைச் சுங்கத்தை வந்தடைந்துள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. கொள்கலன் இல. :-----.
2. அளவு தொகை லீற்றர் :-----.

   மாவூறல் மதுபானம் அல்லது பியர் -

   வைன் -

   ஏனைய வெளிநாட்டு மதுபானம் -

3. சுங்கப் பிரகடனம் இல. மற்றும் திகதி :............................
4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :..............
5. ஏனைய விடயங்கள் :....................

------------------------------------------,
அதிகாரமளிக்கப்பட்ட சுங்க அலுவலரின் கையொப்பம்.

திகதி :-----.

**அட்டவணை IV**

***மதுபானத்தினை இடம் பெயர்ப்பதற்கான அனுமதிப்பத்திரம்***

அனுமதிப்பத்திர இல. :-----.

1. இறக்குமதியாளரின் பெயர் :......................................................................................................................................
2. தேசிய அடையாள அட்டை அல்லது வியாபார பதிவு இல. :..........................................................................................
3. வியாபார முகவரி :....................................................................................................................................................
4. மதுபான இறக்குமதி உரிம இலக்கம் :........................................................................................................................
5. நாட்டினுள் மதுபானத்தினை இறக்குமதி செய்வதற்கான மார்க்கம் (ஆகாய வழி/கடல்வழி).

6.

| மதுபான இடப் பெயர்விற்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்/கொள் கலன்களின் எண் | சுங்கப் பிரகடன இல. மற்றும் திகதி | மதுபான வகை | மதுபானத்தின் அளவு (தொகை லீற்றர்கள்) |
|---|---|---|---|
| | | | |

7. மதுபானம் இடப்பெயர்க்கப்படுகின்ற இடத்தின் பெயரும் முகவரியும் :...................................................................
8. மதுபான இடப்பெயர்விற்காக பயன்படுத்தப்படுகின்ற செல்வழி :..............................................................................
9. மதுபான இடப்பெயர்வு அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :..................................................................
10. இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானத்திற்கான மதுவரி சான்றிதழ் இல. :................................................
11. ஏனைய விடயங்கள் :

மேற்குறித்த தொகையளவிலான மதுபானங்களை இடம்பெயர்ப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

.............................................,
அதிகாரம் பெற்ற மதுவரி உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :......................

இடப்பெயர்வு அனுமதிப்பத்திரத்தினைப் பொறுப்பேற்ற நபரின் பெயர் :.........................................
தே. அ. அ. இல. :..........................................................................
கையொப்பம் மற்றும் திகதி :.........................................................

**அட்டவணை V**

**இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தப்பட்டமைக்கான சான்று**

இலக்கம் :-----.

இறக்குமதி அனுமதிப்பத்திர இல. :.......................................................................................................................................

உரிமப்பத்திரதாரரின் பெயர் :.......................................................................................................................................

| இ. மு. குறியீடு | வகை மற்றும் அளவு (தொகை லீற்றர்) | செலுத்தப்பட்ட வரி ரூபா | பற்றுச் சீட்டு இல. திகதி |
|---|---|---|---|
| | (i) மாவூறல் மதுபானம் அல்லது பியர் :................................................<br>(ii) வைன் :..............................................<br>(iii) ஏனைய வெளிநாட்டு மதுபானம் .................................................. | | |

சுங்கப் பிரகடன இல. மற்றும் திகதி :-

கொள்கலன் இலக்கம் :-

வார்நாமம்/விமான வழிச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :-

இடப்பெயர்வு அனுமதிப்பத்திர இலக்கம் :-

.......................................................,
அதிகாரம் பெற்ற மதுவரி உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :...............................

*1- 532*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.